2010 மே 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

பூங்காவில் நகரியம் ஒன்றை ஏற்படுத்தலாம் என்று முடிவெடுத்து, அந்த முடிவை நிறைவேற்றுவதற்காக சிங்கப்பூரைச் சேர்ந்த Lee Kim Tah Holding என்கிற நிறுவனத்தோடு 16–9–2003 அன்று அ.தி.மு.க. அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி, 104 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தில், நகரியத்தை உருவாக்கிட வேண்டுமென்றும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15 இலட்சம் செலுத்த வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த நகரியம் ஏற்படுத்துவது பற்றியோ அல்லது இந்த இடத்தை அந்தத் தனியாருக்கு ஒப்படைப்பது பற்றியோ எந்தவிதமான டெண்டரும் உங்கள் ஆட்சியிலே கோரப்படவில்லை.

கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் எவ்வாறு டெண்டர் இல்லாமல், தன்னிச்சையான அரசாணை மூலமாகவே விரும்பிய நிறுவனங்களுக்கெல்லாம் நிலங்கள் வழங்கப்பட்டன என்பதற்கும், தற்போது டெண்டர் கோரி அதிலே அதிகத் தொகை கேட்டவர்களுக்கு முறைப்படி நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதற்கும் இடையே இருக்கக்கூடிய வேறுபாட்டை இதிலிருந்தே நீங்கள் தெளிவாக அறிந்துகொள்ளலாம் என்பதை மாத்திரம் எடுத்துச்சொல்லி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கவன ஈர்ப்பு

ஈரோடு மாவட்டம், ஈரோடு–பெருந்துறை, சென்னிமலை–ஈங்கூர் இரயில்வே மேம்பாலப் பணிகளை விரைவுபடுத்தக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ்.சேகர் அவர்கள், கீழ்க்காணும் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், ஈரோடு பெருந்துறையிலிருந்து சென்னிமலை–காங்கேயம் செல்கிற பாதையில், மிக வேகமாக நடைபெறவேண்டிய சென்னிமலை–ஈங்கூர் இரயில்வே மேம்பாலப்

[திரு. விடியல் எஸ். சேகர்] [2010 மே 11

பணிகள், கடந்த பல வருடங்களாக மிகத் தாமதமாக நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் இன்னும் முடியாமல் இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதை நான் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

ஈங்கூர் இரயில்வே மேம்பாலப் பணியில் இரயில்வே துறையின்மூலம் கட்டப்படும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. அதன் தொடர்ச்சியாக நெடுஞ்சாலைத் துறையின்மூலம் செய்யப்பட வேண்டிய பணிகள் விரைவுபடுத்தப்பட்டு ஏப்ரல் மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், ஈங்கூர் இரயில்வே மேம்பாலப் பணிகள் குறித்து மிகச் சுருக்கமான 3 வரி அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். மேம்பாலப் பணிகள் ஏப்ரல் மாத இறுதிக்குள் முடிக்கப்படுமென்று அதில் தெரிவித்திருக்கிறார்கள். மேம்பாலப் பணிகள் கடந்த பல வருடங்களாக நடைபெற்று வருவதால், பொது மக்களுக்கு சிரமமான சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த மேம்பாலப் பணிகளை மிக வேகமாக முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேம்பாலப் பணிகளின் திட்ட மதிப்பீடு எவ்வளவு என்பதையும், அந்த மேம்பாலம் எப்போது திறக்கப்படும் என்பதையும் அறிய விரும்புவதோடு, ஈரோடு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விடியல் எஸ். சேகர், இரண்டு கேள்விகள் மாத்திரம்தான் கேட்கலாம், கேளுங்கள்.

திரு. விடியல் எஸ். சேகர்: ஈரோடு மாவட்டம், ஈங்கூர் சென்னிமலை வழியாக காங்கேயம் செல்கிற சாலையை, மாநில

2010 மே 11] [திரு. விடியல் எஸ். சேகர்]

நெடுஞ்சாலையாக மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்பதோடு, ஈரோடு மாநகரிலுள்ள சாஸ்திரி நகர்–இரயில்வே கடவு–சடையம்பாளையம் மேம்பாலப் பணிகள் எப்பொழுது தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான விளக்கமான பதில், ஈரோடு–பெருந்துறை–காங்கேயம் சாலை என்பது மாநில நெடுஞ்சாலையாக ஏற்கெனவே வகைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே, ஈங்கூர் இரயில்வே கடவு எண் 126–ல் சாலை மேம்பாலம் கட்டுவதற்கானப் பணிகளுக்கு 2000–2001 ஆம் ஆண்டில் அரசாணைமூலம் ரூ.13 கோடியே 37 இலட்சங்களுக்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதனுடைய அரசாணை எண் .76, நெடுஞ்சாலை HQ2, நாள் 5–10–2000. எனவே, அதற்குப் பிறகு, இந்தப் பணிகள் நடைபெறுவதற்கான ஒப்பந்தப்புள்ளி 21–1–2005 அன்று கோரப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. அதனுடைய பணிகள் 23–5–2005 அன்று தொடங்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு, அந்தப் பாலம் ஏற்கெனவே சாலையின் நேர்ப்பாட்டில் அமைந்துள்ள காரணத்தினால், அங்கேயிருந்த இரயில்வே கடவை மாற்றி அமைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, அதற்கு இரயில்வே துறை, அதுவும் குறிப்பாக அதனுடைய இணைத் துறையாக இருக்கக்கூடிய இரயில்வே பாதுகாப்புத் துறை பெங்களூரை தலைமையிடமாகக் கொண்டு அங்கே செயல்பட்டு வருகிறது. அதனுடைய ஆணையத்திற்கு இரயில்வே துறை மூலமாக அங்குள்ள gate–ஐ மாற்றி அமைக்குமாறு கோருகிற நேரத்தில், பல மாதகாலம் எடுத்துக்கொண்டு அதை வந்து பார்த்து, அந்த இரயில்வே gate–ஐ மாற்றியமைக்காத காரணத்தினால், இரயில்வே பாலப் பணியில் தாமதம் ஏற்பட்டது. அதற்குப்பிறகு, நம்முடைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் இரயில்வே துறையில் இணை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு திரு. அரங்க. வேலு அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சொல்லி,

அவரும் அதற்குத் தொடர்ந்து முயற்சியெடுத்து, அதற்குப்பிறகு ஆணையம் பார்வையிட்டு, அந்த இடத்தை மாற்றியமைத்ததற்குப் பிறகுதான், பாலப் பணி தொடங்கி நடைபெற்று முடிந்திருக்கிறது. முக்கியமான பணிகள் முடிவுற்றுவிட்டன. இறுதிக் கட்டப் பணி அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்து, இந்த மாத இறுதிக்குள் மக்களுடைய பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், one more question.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்படுமா என்று அறிய விரும்புவதோடு, தமிழகத்திலே எத்தனை இரயில்வே மேம்பாலங்கள் கட்ட மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டிருக்கிறது; அந்தப் பணிகளினுடைய முன்னேற்றத்தைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் விளக்குவாரா என்று கேட்டு, ஈரோடு அரசு மருத்துவமனை அருகில் மேம்பாலம் கட்டுகிற பணி எப்பொழுது தொடங்கப்படும் என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு, பெருந்துறை, காங்கேயம் சாலை மாநில நெடுஞ்சாலையாகும். அதனை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றக்கூடிய அளவிற்கு அதிலே போக்குவரத்து இல்லை. எனவே அதை மாநில நெடுஞ்சாலையாகத்தான் தொடர்ந்து பராமரிக்கக்கூடிய சூழ்நிலையிருக்கிறது. அடுத்து நம்முடைய மொத்த இரயில்வே கடவுகளில் எத்தனை பாலங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், கடந்த 5–5–2010 அன்று நடைபெற்ற நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையினுடைய மானியக் கோரிக்கையில் விளக்கமாக அதற்கு

2010 மே 11] [திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்]

ஒரு பதிலும் சொல்லியிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால், அதைவிட கொள்கை விளக்கக் குறிப்பிலே மிக விளக்கமாக இரயில்வே கடவிலே கட்டப்பட வேண்டிய, அனுமதி பெறப்பட்ட பாலங்களினுடைய விவரங்களை விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். எனவே, மீண்டும் கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் எண் 88–ஐ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனமாக இரண்டு, மூன்று பக்கங்களைப் படித்தால் முழு விளக்கத்தையும் அறிந்துகொள்ளலாம். அதற்குப் பிறகு, நேரிலேயும்கூட நான் அதற்குரிய விளக்கத்தைத் தர கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, ஈரோடு நகரிலே அறிவிக்கப்பட்டிருக்கிற மேம்பாலங்களைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய ஈரோடு மாநகரிலுள்ள பன்னீர்செல்வம் பூங்கா அருகிலே பாலப் பணி இன்னும் ஒரு வாரத்திலே தொடங்கப்படவிருக்கிறது. அதற்குப்பிறகு, அரசு மருத்துவனை அருகிலே ஓர் உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு அங்கே இடப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினால் நிலம் கையகப்படுத்தாமல் முடிந்த அளவு அந்த இடத்திலே ஒரு மேம்பாலம் அமைப்பதற்கு வடிவமைப்பு இறுதி செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட நிருவாகத்தின் மூலமாக அதற்குரிய அனுமதியைப் பெறுகிற சூழ்நிலையிலே இந்த ஆண்டு அதற்குரிய பணியையும் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2009–2010 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் இருபத்து ஒன்பதாவது மற்றும் முப்பதாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.